6. கவன ஈர்ப்பு.

(அ) குத்தாலம் தொகுதியில் நியாய விலையில் அரிசி கிடைக்காததால் உடன் நியாய விலையில் அரிசி கிடைக்க ஆவன செய்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக குத்தாலம் தொகுதியில் நியாய விலையில் அரிசி கிடைக்காத காரணத்தால் ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதால் உடன் நியாய விலையில் அரிசி கிடைக்க ஆவன செய்வது குறித்து", மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நடுத்தர புழுங்கல் அரிசியின் விலை பொதுவாக கிலோ ரூ. 1.80 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. மாவட்டத்தில் 13 தாலுகாக்களில், 11 தாலுகாக்களில் இந்த விலைதான் உள்ளது. நாகப்பட்டினம் தாலுகாவில் மட்டுமே கிலோ ரூ. 2.00 ஆகவும், சீர்காழி தாலுகாவில் கிலோ ரூ. 2.20 ஆகவும் உயர்ந்துள்ளது. சம்பா அறுவடை முடிந்து அடுத்த குறுவை அறுவடை வருவதற்கு முன்பாக இடைக் காலத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரை நெல், அரிசி விலையில் சிறிது உயர்வு ஏற்படுவது ஒவ்வொரு ஆண்டிலும் இயல்பான அம்சமே. மேலும் இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் தண்ணீர் விடுவது குறித்து தெளிவற்ற நிலைமை சில நாட்களுக்கு முன்பு வரை இருந்ததையொட்டி, விலை உயர்வு ஏற்பட்டிருக்கலாம். குறுவை நிலைமை இப்போது தெளிவடைந்துள்ளதால், தஞ்சையில் வெளிச்சந்தை விலை குறையும் என்று எதிர் பார்க்கலாம். வெளிச்சந்தை விலை உயர்வைக் கட்டுப்படுத்த மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி விற்பனையை மேலும் விரிவான அளவிற்கு மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டன. விலைவாசிகளில் ஏற்பட்டுள்ள சிறிது உயர்வை கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை உதவும் என்று நம்புகிறோம். தஞ்சையில் அரிசி நிலைமையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்று கூறுவதற்கு சிறிதும் இடமில்லை. அரிசி தாராளமாகக் கிடைக்கின்றது என்பதை அரசுக்கு வந்துள்ள தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. அவசியம் ஏற்பட்டால், பொது விநியோக முறையின்கீழ் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, குத்தாலம், குடவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் அரிசி கிலோ ரூ. 2.20, ரூ. 2.40 ஆக விற்பதாகத் தகவல் வந்ததன் பேரில் நேற்று முன்தினம்—3—8—1977 அன்று நான் தஞ்சை சென்று, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களையும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி அவர்களையும் சந்தித்து அரிசி தட்டுப்பாடுள்ள இடங்களையும் அரிசி நியாய விலையில் கிடைக்காத இடங்களையும் எடுத்துச் சொல்லிய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசையும், குறிப்பாக மாண்புமிகு உணவு அமைச்சரவர்களையும் கலந்துகொண்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்க நியாய விலைக் கடைகள் திறக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, முக்கியமான பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது. என்றாலும், அரசுக்கு வந்திருக்கின்ற குறிப்பைப் பார்க்கும்பொழுது, பொதுமக்கள் நியாய விலைக் கடைகளில் போய் அரிசி வாங்குவது குறைவாக இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே நியாய விலைக் கடைகளில் போடப்படுகின்ற அரிசியை ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் பயன்படுத்திக் கொண்டால், அதுவே போதும் என்று அரசு கருதுகிறது.

(ஆ) மழை இல்லாத காலங்களிலும், வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள கிராமங்களில் கூட்டுறவு சங்கக் கடன் பாக்கிக்காக சொத்துக்களை ஜப்தி செய்வதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, . . .

(திரு. மா. மணிமாறன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கவன ஈர்ப்புத் தீர்மானம். தீர்மானத்தைக் கொடுத்தவர் மட்டும்தான் அதைப் படிக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS